NEED 24 NEWS
DIGITAL E-PAPER
हर खबर, हर शहर
PRGI APPLICATION UNDER PROCESS
Application No. T/GJ/2026/0619/2304/1577
GST GSTIN 24CINPG0564Q1ZT
UDYAM REGISTERED UDYAM-GJ-14-0003714
www.need24.digital
info@need24.in
+91 98700 06472
FOLLOW US:
तेज़ | सटीक | निष्पक्ष | जनहित में | सच की आवाज़ | जन-जन की आवाज़ | निडर पत्रकारिता



# காவல்துறை அதிகாரியை அரிவாளால் வெட்ட முயன்ற நபர் கைது: திருநெல்வேலி மாவட்டம் பரபரப்பு




### திருநெல்வேலி மாவட்டம் விஜயநாராயணம் அருகே வாகன சோதனையில் ஈடுபட்டிருந்த காவல்துறை உதவி ஆய்வாளரை அரிவாளால் வெட்ட...

**EDWIN MICHAEL RAJ, Tirunelveli।** திருநெல்வேலி மாவட்டம் விஜயநாராயணம் அருகே படப்பர் குளம் பகுதியில் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்த வடக்கு விஜயநாராயணம் காவல் உதவி ஆய்வாளர் காளியப்பனை, இரு சக்கர வாகனத்தில் வந்த இளைஞர் ஒருவர் அரிவாளால் வெட்ட முயன்ற சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. விசாரணைக்காக நிறுத்தப்பட்ட இளைஞர், திடீரென ஆத்திரமடைந்து மறைத்து வைத்திருந்த அரிவாளால் உதவி ஆய்வாளரைத் தாக்க முயன்றார். உடனடியாக சுதாரித்த சக காவலர்கள் அவரை மடக்கிப் பிடித்து கைது செய்தனர். கைது செய்யப்பட்ட இளைஞர், படப்பார் குளத்தைச் சேர்ந்த ஆனந்தராஜ் (26) என்பது விசாரணையில் தெரியவந்துள்ளது. இவர் மீது ஏற்கனவே கோயில் கொடை விழாவில் சதீஷ்குமார் என்பவரை வெட்டிய வழக்கு நிலுவையில் உள்ளது. இந்தச் சம்பவத்தை...

# சூலூர் தாவெக எம் எல் ஏ சுகுமார் மீது கல்வீச்சு




### சூலூர் தாவெக எம் எல் ஏ சுகுமார் மீது கல்வீச்சு

**Musthafa Hussain, Coimbatore।** கோவை மாவட்டம் சூலூர் அடுத்து நாகம்மா நாயக்கன்பாளையம் பகுதியில் குட்டை தூர்வாரி சுத்திகரிக்கப்பட்ட நீரை நிரப்புவதற்கு எதிர்ப்பு தெரிவித்து அப்பகுதி மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர் தூர்வாரும் பணியே துவக்கி வைக்க வருகை தந்திருந்த சூலூர் எம்எல்ஏ சுகுமார் அவர்களை மக்கள் சிறை பிடித்து போராடினர் அச்சமயத்தில் எம்எல்ஏ உடன் வந்த ஆதரவாளர்கள் பூமி பூஜை போட்டதால் மக்கள் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர் பின்பு எம்எல்ஏ மீது கல் வீசியதால் அங்கு சற்று பரபரப்பு ஏற்பட்டது பின்பு போலீசார் சமரச பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு கூட்டத்தை கலைத்தனர்

## கால்வாயை சீரமைக்க பொதுமக்கள் கோரிக்கை



**A RAM PRABHU।** வேலூர் மாவட்டம் காட்பாடி தாலுகா பகுதியை சேர்ந்த மண்டலம் 1 வார்டு 10 சிந்து கார்டன் 2 வது தெரு செல்லும்பகுதியில் இந்திரா நர்சிங் மருத்துவமனை அருகில் உள்ள மிகப்பெரிய கழிவுநீர் கால்வாயில் மரங்கள் செடிகள் வளர்ந்து காணப்படுகிறது.மேலும் குப்பை, மற்றும் சில பிளாஸ்டிக் கழிவு பொருட்கள் கிடப்பதால் கழிவு நீர் செல்லாமல் அடைப்பு ஏற்பட்டுள்ளது மழைக்காலம் என்பதால் இந்த கால்வாய்களில் மழை நீர் வந்து குடியிருப்பு வீடுகளில் கழிவு நீர் புகுந்து விடுகிறது.விஷ பாம்புகள் வீட்டுக்குள் வந்துவிடும் ஆகவே மாநகராட்சி ஆணையர் மற்றும் உயர் அதிகாரிகள் நேரில் வந்து பார்வையிட்டு கழிவுநீர் கால்வாயை சீரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை வைத்துள்ளனர்.

## குமரி மாவட்ட சோதனை சாவடிகளில் எஸ்பி ஆய்வு: கனிம கடத்தலை தடுக்க கூடுதல் நடவடிக்கை



**EDWIN MICHAEL RAJ।** கன்னியாகுமரி மாவட்டத்தில் சட்டவிரோதமாக கனிம வளங்கள் கடத்தப்படுவதைத் தடுக்கும் நோக்கில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அன்சுல் நாகர் பல்வேறு சோதனை சாவடிகளுக்கு திடீர் ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, அவர் பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகள் குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தார். தற்போது மாவட்டத்தில் கனிம வள கடத்தலை தடுக்க 41 சோதனை சாவடிகள் செயல்பட்டு வருகின்றன. இந்த நிலையில், சட்டவிரோத செயல்களை மேலும் திறம்பட கட்டுப்படுத்த, கூடுதலாக 14 சோதனை சாவடிகளை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்தும் அவர் ஆய்வு செய்தார். இதன் மூலம், கனிம வளங்கள் கடத்தலை முழுமையாக தடுக்கும் வகையில் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்...

## நெல்லை புதிய பேருந்து நிலையத்தில் ஆக்கிரமிப்பு கடைகள் அகற்றம்: உணவு பாதுகாப்புத் துறை அதிரடி

**EDWIN MICHAEL RAJ, Tirunelveli।** திருநெல்வேலி புதிய பேருந்து நிலையத்தில், விதிமுறைகளை மீறி ஆக்கிரமிப்பு செய்து வைக்கப்பட்டிருந்த கடைகளை உணவு பாதுகாப்புத் துறை அதிகாரிகள் இன்று காலை அதிரடியாக அகற்றும் பணியில் ஈடுபட்டனர். இந்த நடவடிக்கை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. பேருந்து நிலைய வளாகத்தில் உள்ள கடைகள் மற்றும் பிற பகுதிகள் முறையாகப் பயன்படுத்தப்படாமல், சிலர் ஆக்கிரமிப்பு செய்து கடைகளை அமைத்திருந்ததாகக் கூறப்படுகிறது. இது பொதுமக்களின் நடமாட்டத்திற்கும், பேருந்துகள் வந்து செல்வதற்கும் இடையூறாக இருந்ததாகப் புகார்கள் எழுந்தன. இதனைத் தொடர்ந்து, உணவு பாதுகாப்புத் துறை அதிகாரிகள் உரிய அனுமதியின்றி ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருந்த கடைகளை அகற்றும் பணியைத் தொடங்கினர். இந்த நடவடிக்கையா...

## நாகர்கோவிலில் டெங்கு ஒழிப்பு: மாநகராட்சி தீவிர முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்

**EDWIN MICHAEL RAJ।** நாகர்கோவில் மாநகராட்சிப் பகுதிகளில் டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்கும் வகையில், மாநகராட்சி நிர்வாகம் தீவிர முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இதற்காக, சிறப்பு தூய்மைப் பணிகள் மற்றும் கொசு ஒழிப்பு நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. மாநகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும், சுகாதார ஆய்வாளர்கள் மற்றும் பணியாளர்களைக் கொண்டு வீடு வீடாகச் சென்று டெங்கு காய்ச்சல் பரவும் காரணிகள் கண்டறியப்பட்டு வருகின்றன. குறிப்பாக, வீடுகளில் தேங்கிக் கிடக்கும் தண்ணீர், பயன்படுத்தப்படாத பாத்திரங்கள், உடைந்த பொருட்கள் போன்றவற்றில் கொசுக்கள் உற்பத்தியாகாதவாறு அறிவுறுத்தப்பட்டு, அவை அப்புறப்படுத்தப்படுகின்றன. மேலும், பொது இடங்கள், பூங்காக்கள், பள்ளிகள்,...

## திமுக உண்மையான பாஜக: முதல்வர் விஜய் விமர்சனம்; ஸ்டாலினை ' என குறிப்பிட்டார்



**Udhaya Prakash . S, Chennai** I திமுகவை உண்மையான பாஜக என்று முதல்வர் விஜய் கடுமையாக விமர்சித்துள்ளார். இது அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. மேலும், முதல்வர் ஸ்டாலினை ' என்று குறிப்பிட்டதும் கவனிக்கத்தக்கது. இந்த கருத்துக்கள், தமிழக அரசியலில் புதிய விவாதங்களை எழுப்பியுள்ளது. முதல்வர் விஜய்யின் இந்த கருத்துக்கள், திமுக மற்றும் பாஜக இடையேயான உறவு குறித்த கேள்விகளை எழுப்பியுள்ளது. அவரது விமர்சனங்கள், வரவிருக்கும் அரசியல் நகர்வுகளுக்கு ஒரு முன்னோட்டமாக பார்க்கப்படுகிறது.

## வத்திராயிருப்பு சதுரகிரி மலையில் தீ



**B Sakkariah** I விருதுநகர் மாவட்டம் வத்திராயிருப்பு தாலுகா சதுரகிரி மலைப்பகுதியில் தீ பரவி வருகிறது.

## வேலூர் விமான நிலையத்தில் விமானம் தரையிறங்கியது




**வேலூர் விமான நிலையத்தில் ஒரு விமானம் வெற்றிகரமாக தரையிறங்கியது. இது அப்பகுதியில் ஒரு முக்கிய நிகழ்வாகக் கருதப்...**

**S Dinesh** I வேலூர் விமான நிலையத்தில் இன்று ஒரு விமானம் வெற்றிகரமாக தரையிறங்கியது. இந்த நிகழ்வு அப்பகுதியில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. இது ஒரு முக்கிய போக்குவரத்து மற்றும் வளர்ச்சி மைல்கல்லாகக் கருதப்படுகிறது. புதிய விமான நிலையத்தின் செயல்பாடுகள் குறித்த மேலும் விவரங்கள் விரைவில் எதிர்பார்க்கப்படுகின்றன. இந்த விமான சேவையின் தொடக்கம், வேலூர் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், பயணிகளுக்கு இது ஒரு புதிய போக்குவரத்து வாய்ப்பை வழங்கும்.

## மாற்றுத்திறனாளிகளிடம் பண மோசடி இருவர் கைது




**B Sakkariah** I விருதுநகர்: விருதுநகர் மாவட்டத்தில்அரசு வேலை வாங்கித் தருவதாக கூறி மாற்றுத்திறனாளிகள், குடும்பத்தினரை குறி வைத்து ரூ.லட்சக்கணக்கில் பணம் பறித்த காயத்ரி 35, முத்துசங்கரனை 36, சைபர் கிரைம் போலீசார் கைது செய்தனர். காரியாபட்டி முடுக்கன்குளத்தை சேர்ந்தவர் ராஜகுமாரி 47. இவர் மாற்றுத்திறனாளியின்தாய். இவரிடம்ராஜபாளையத்தைச் சேர்ந்த காயத்ரி, அலைபேசியில் அழைத்து, கலெக்டர் அலுவலகத்தில் மாற்றுத்திறனாளிகள் நலப் பிரிவிலிருந்து பேசுவதாகக் கூறி, அவரது மகனுக்கு அரசு வேலை, எலக்ட்ரிக் பைக் வாங்கித் தருவதாக ஆசை வார்த்தை கூறியுள்ளார். இதை நம்பி ராஜகுமாரி தன் நகைகளை அடகு வைத்துப் பல தவணைகளாக ரூ.5 லட்சம் வரை வங்கி கணக்கில் அனுப்பி வைத்து ஏமாந்துள்ளார். இதே நபர்...

## மதுராந்தகம் இடைத்தேர்தல்: பாதிரி கிராமத்தில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரிப்பு



**S Dinesh** I வேலூர் தெற்கு மாவட்ட கழகச் செயலாளரும், அணைக்கட்டு சட்டமன்ற முன்னாள் உறுப்பினருமான அண்ணன் இளம்புயல் AP நந்தகுமார் அவர்களின் ஆணைக்கிணங்க, மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பாதிரி கிராமத்தில் குடியாத்தம் நகர கழகத்தின் சார்பில் வாக்கு சேகரிப்புப் பணி நடைபெற்றது. குடியாத்தம் நகர மன்றத் தலைவர் மற்றும் நகர திமுக செயலாளர் எஸ். சௌந்தர்ராஜன் தலைமையில், குடியாத்தம் நகர மகளிர் அணியினர் பாதிரி கிராம மக்களுக்கு உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களிக்குமாறு கோரி வாக்கு சேகரித்தனர். இந்த நிகழ்வில் கழகத்தின் வெற்றிக்கு பாடுபடுமாறு வலியுறுத்தப்பட்டது. வேலூர் தெற்கு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதியில், எலப்பாக்கம் ஒன்றியத்திற்குட்பட...

## சி எம் ஜோசப் விஜய் பரப்புரை




**Balamurugan, Chennai** I சிஎம் ஜோசப் விஜய் மதுராந்தகம் தொகுதி மக்களை நேரில் சந்தித்து விசில் சின்னத்திற்காக வாக்குகளை சேகரித்தார் அப்பொழுது அவர் திமுகவையும் அதிமுகவையும் பிளாஸ்ட் செய்த சம்பவம் சமூக வலைத்தளங்களில் ட்ரெண்டிங் ஆகி வருகிறது

## வேலூர் மாவட்ட ஓய்வூதியம்/உதவித்தொகை பெறுவோருக்கான முக்கிய அறிவிப்பு!

**A RAM PRABHU** I மத்திய அரசின் உதவித்தொகை திட்டங்களான IGNOAP, IGNDAPS மற்றும் IGNDWPS ஆகியவற்றின் கீழ் உதவித்தொகை பெறும் பயன்பெறுபவர்கள், எவ்வித தடையுமின்றி தொடர்ச்சியாக உதவித்தொகை பெற கீழ்க்கண்ட நடைமுறைகளைப் பின்பற்றுமாறு வேலூர் மாவட்ட ஆட்சியர் கேட்டுக்கொண்டுள்ளார்:ஆதார் விவரங்களைப் புதுப்பித்தல்: பெயர், பிறந்த தேதி, முகவரி, மொபைல் எண் மற்றும் கைரேகை பதிவு ஆகிய விவரங்களை ஆதார் மையத்தில் புதுப்பிக்க வேண்டும். வங்கி கணக்கு இணைப்பு: வங்கிக் கணக்குடன் ஆதார் எண்ணை தவறாமல் இணைக்க வேண்டும்.குடும்ப அட்டை இணைப்பு: ரேஷன் கார்டுடன் (குடும்ப அட்டை) ஆதார் எண்ணை இணைக்க வேண்டும்.ஆவணங்கள் சமர்ப்பித்தல்: மேற்கண்டவாறு இணைக்கப்பட்ட ஆவணங்களை காட்பாடியில் உள்ள வட்...

## நியாய விலை கடைகளுக்கு அனுப்பப்படும் பொருட்களின் இருப்பு, தரம் குறித்து ஆட்சியர் ஆய்வு


**A RAM PRABHU** I வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் பி.எஸ். வீலா அலெக்ஸ் இன்று (24-ந்தேதி வியாழக்கிழமை) பலவன்சாத்துகுப்பத்தில் உள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக கிடங்கை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது, நியாய விலை கடைகளுக்கு அனுப்பி வைக்கப்படும் பொருட்களின் இருப்பு, தரம் மற்றும் எடை அளவு முறையாக பராமரிக்கப்படுகிறதா, உரிய அளவில், குறித்த நேரத்தில் நியாய விலை கடைகளுக்கு அனுப்பப்படுகிறதா என்பது குறித்தும் அதிகாரிகளிடம் கேட்டறிந்தார். இந்த ஆய்வின்போது தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்கு மண்டல மேலாளர் ரமேஷ் கண்ணா, மாவட்ட வழங்கல் அலுவலர் சரவணன், தனி வட்டாட்சியர் (குடிமைப் பொருள்) தேவிகலா, வேலூர் வட்டாட்சியர் உதயகுமா...

# சமூகப் பாதுகாப்பு திட்ட உதவித்தொகை பெற ஆதாருடன் வங்கி கணக்கு இணைப்பு கட்டாயம்




**A RAM PRABHU|** வேலூர் மாவட்டத்தில் சமூகப் பாதுகாப்பு திட்ட உதவித்தொகை பெற ஆதார் - வங்கி கணக்கு இணைப்பு கட்டாயம்மத்திய அரசின் அறிவுறுத்தலின்படி, சமூகப் பாதுகாப்பு திட்ட உதவித்தொகை இனி ஆதார் அடிப்படையிலான பணப்பரிவர்த்தனை முறையில் மட்டுமே வழங்கப்படும் என வேலூர் மாவட்ட ஆட்சியர் திருமதி. பி.எஸ்.லீலா அலெக்ஸ் அறிவித்துள்ளார். முக்கிய விவரங்கள்:வேலூர் மாவட்டத்தில் பெரும்பாலான பயனாளிகளுக்கு ஆதார் அடிப்படையிலான முறையில் இம்மாத உதவித்தொகை ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளது.எனினும், வங்கி கணக்குடன் ஆதார் எண் முறையாக இணைக்கப்படாத சில பயனாளிகளுக்கு உதவித்தொகை சென்றடைவதில் சிரமம் ஏற்பட்டுள்ளது.இம்மாத உதவித்தொகை பெறாத பயனாளிகள், உடனடியாக சம்பந்தப்பட்ட வங்கி கிளைகளை...

# மேலப்பாளையம்: தெரு நாய்களை அப்புறப்படுத்தக் கோரி எஸ்டிபிஐ கட்சியினர் வலியுறுத்தல்



**EDWIN MICHAEL RAJ, Tirunelveli|** திருநெல்வேலி மாவட்டம் மேலப்பாளையம் பகுதியில் தெரு நாய்கள் தொல்லை அதிகரித்து வருவதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. இது தொடர்பாக எஸ்டிபிஐ கட்சியினர் மாநகராட்சி நிர்வாகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர். மேலப்பாளையம் பகுதியில் தெரு நாய்கள் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்துவதாகவும், குறிப்பாக குழந்தைகள் மற்றும் முதியவர்கள் நடமாட அச்சப்படும் சூழல் நிலவுவதாகவும் கூறப்படுகிறது. இது குறித்து எஸ்டிபிஐ கட்சியினர் தங்கள் எதிர்ப்பைப் பதிவு செய்துள்ளனர். மாநகராட்சி நிர்வாகம் தற்போது நாய்களைப் பிடிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தாலும், அது கண்துடைப்பு நடவடிக்கையாகவே உள்ளதாகவும், தெருக்களில் உள்ள அனைத்து நாய்களையும் முழுமையாக அப்புறப்படுத்த வேண்டும் என்றும் எஸ...

# கோவையில் நாளை மின்தடை!

**Musthafa Hussain, Coimbatore|** ⚡ கோவையில் நாளை மின்தடை! 📍 சூலூர் துணை மின் நிலையம் 📅 நாளை – செப்டம்பர் 28, திங்கட்கிழமை ⏰ காலை 9 மணி முதல் மதியம் 2 மணி வரை 🔧 பராமரிப்புப் பணிகள் காரணமாக மின்விநியோகம் நிறுத்தப்படும் பகுதிகள்: • சூலூர் • டி.எம்.நகர் • ரங்கநாதபுரம் • எம்.ஜி.புதூர் • பி.எஸ்.நகர் • கண்ணம்பாளையம் • காங்கேயம்பாளையம் • ராவுத்தூர் ⚠️ பொதுமக்கள் தேவையான மின்சாதனங்கள் மற்றும் குடிநீர் உள்ளிட்ட அத்தியாவசிய ஏற்பாடுகளை முன்கூட்டியே செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

# கன்னியாகுமரியில் டெம்போ மோதி 13 வயது சிறுவன் உயிரிழப்பு



**EDWIN MICHAEL RAJ, Tirunelveli|** கன்னியாகுமரி மாவட்டம் தூத்தூர் அருகே குறுகிய சாலையில் இன்று காலை டெம்போ ஒன்று சுவரில் மோதியதில் 13 வயது சிறுவன் பரிதாபமாக உயிரிழந்தான். சிறுவன் தனது சகோதரியுடன் பள்ளி வேனில் ஏறி பள்ளிக்குச் சென்று கொண்டிருந்தபோது இந்த விபத்து நேர்ந்துள்ளது. டெம்போவின் பலத்த மோதலால் சிறுவன் சம்பவ இடத்திலேயே நசுங்கி உயிரிழந்தான். சிறுவனின் உடல் பிரேத பரிசோதனைக்காக அரசு மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. டெம்போ ஓட்டுநரை போலீஸார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். விபத்து நடந்தபோது எடுக்கப்பட்ட சிசிடிவி காட்சிகள் வெளியாகி பொதுமக்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# அனைத்து வங்கிகளிலும் அடுத்த மூன்று நாட்களுக்கு ஏடிஎம் களில் பணம் எடுக்க கட்டணமில்லா சேவை

**Sundar M|** *அனைத்து ஏ.டி.எம்.களிலும் கட்டணமின்றி பணம் எடுக்கலாம்– பொதுத்துறை வங்கிகள்.* அனைத்து சனிக்கிழமைகளிலும் விடுமுறை உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, வங்கி ஊழியர்கள் 3 நாட்கள் (செப்டம்பர் 28-30) வேலைநிறுத்தத்தில் ஈடுபட உள்ளனர். டெபாசிட், பணம் எடுத்தல், காசோலை பரிவர்த்தனை உள்ளிட்ட முக்கிய வங்கி சேவைகள் பாதிக்கப்படலாம். இணையதள வங்கி சேவை, ஏ.டி.எம். மற்றும் டிஜிட்டல் பரிவர்த்தனைகளை பயன்படுத்துமாறு வாடிக்கையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. 3 நாட்களிலும் எந்த வங்கி ஏ.டி.எம். மூலமும் கூடுதல் கட்டணமின்றி பணம் எடுக்கலாம்; வழக்கமான மாதாந்திர இலவசப் பரிவர்த்தனை வரம்பும் பொருந்தாது. தொழில் நிறுவனங்கள், வர்த்தகர்கள் மற்றும் சிறு வியாபாரிகளும் பணத்...

# முன்னாள் இஸ்ரோ தலைவர் டாக்டர் கே.சிவன் வருகை: நெல்லை SAV மகளிர் கல்லூரியில் பட்டமளிப்பு விழா



**EDWIN MICHAEL RAJ, Tirunelveli|** திருநெல்வேலி மாவட்டம், வடக்கன்குளம் எஸ்.ஏ.வி. சகாயத்தாய் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் பட்டமளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராக முன்னாள் இஸ்ரோ தலைவர் டாக்டர் கே.சிவன் கலந்துகொண்டார். அவரை SAV குழுமங்களின் தலைவர் திரு. எம். கிரகாம்பெல் மற்றும் இயக்குனர் திரு. எம். திவாகரன் ஆகியோர் பொன்னாடை போர்த்தி வரவேற்றனர். இந்த பட்டமளிப்பு விழா கல்லூரியின் வளர்ச்சிக்கும், மாணவர்களின் எதிர்காலத்திற்கும் ஒரு முக்கிய நிகழ்வாக அமைந்தது. டாக்டர் கே. சிவனை வரவேற்பதன் மூலம், கல்லூரி நிர்வாகம் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையில் மாணவர்களை ஊக்குவிக்கும் ஒரு முன்னெடுப்பை மேற்கொண்டது. டாக்டர் கே. சிவனின் வருகை, மாணவர்களுக்கு உத்வேகம் அளிக்கும் விதமாக...

# கரூர் பழைய பேருந்து நிலையம் அருகே விபத்தில் இறந்தவர்களுக்கு TVK அஞ்சலி




**சமீபத்தில் நடந்த ஒரு குழு விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில், தமிழக கட்சியைச் சேர்ந்த TVK...**

**EDWIN MICHAEL RAJ|** தமிழகத்தின் கரூர் நகரில், சமீபத்தில் நடந்த ஒரு குழு விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில், அரசியல் கட்சியான TVK உறுப்பினர்கள் பழைய பேருந்து நிலையம் அருகே கூடினர். அவர்கள் கட்சி கொடியேற்றி மலர் அஞ்சலி செலுத்தினர். உயிரிழந்தவர்களின் முதல் நினைவைப் போற்றும் வகையில் இந்த செயல்பாடு மேற்கொள்ளப்பட்டதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. கொடியேற்றத்தின் போது, பங்கேற்றவர்கள் ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தினர். பழைய பேருந்து நிலையத்திற்கு அருகில் நடைபெற்ற இந்த அஞ்சலி நிகழ்வு, விபத்தில் உயிரிழந்தவர்களின் நினைவைப் போற்றுவதில் கட்சியின் அர்ப்பணிப்பை வலியுறுத்தியது.

# கூடங்குளம், திருநெல்வேலியில் வாகன சோதனையின் போது கத்தியுடன் போலீஸை தாக்க முயன்ற நபர்



**EDWIN MICHAEL RAJ|** திருநெல்வேலி மாவட்டத்தில், கூடங்குளம் ராதாபுரம் சாலையில் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்த போலீஸார், சந்தேகத்திற்கிடமான மோட்டார் சைக்கிள் ஓட்டியை தடுத்து நிறுத்தினர். ஓட்டுநர் கூடங்குளம் பகுதியைச் சேர்ந்த ராயர் மகன் விக்னேஷ்வரன் (22) என அடையாளம் காணப்பட்டார். சோதனையின் போது, மோட்டார் சைக்கிளில் இருந்த அரிவாளை ஆய்வு செய்ய போலீஸார் முயன்றனர். இது விக்னேஷ்வரனை ஆத்திரமூட்டியது. அவர் பைக்கிலிருந்து ஒரு பெரிய கத்தியை எடுத்து, அதை தன் தலையைச் சுற்றி கட்டிக்கொண்டு, தன்னை கைது செய்ய முயன்றால் தலையை துண்டு துண்டாக வெட்டி அவர்கள் மீது வீசுவதாக போலீஸாரை மிரட்டினார். உடனடியாக செயல்பட்ட போலீஸார், சந்தேக நபரை மடக்கிப் பிடித்து கைது செய்தனர். மேலும், கத்தி மற்ற...

## தூத்துக்குடி சதுப்பு நிலங்களில் 'டின்னி லிட்டில் ஸ்டின்ட்' பறவை காணப்பட்டது



தூத்துக்குடி சதுப்பு நிலங்களில் 'டின்னி லிட்டில் ஸ்டின்ட்' பறவை காணப்பட்டது. பார்வையாளர்கள் பறவையின் இருப்பை உறுதிப்படுத்தினர். இந்தக் காட்சி அப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட பறவை நடவடிக்கைகளை அதிகரித்துள்ளது.

## திமுக தலைவர் மு.க. ஸ்டாலின் தேர்தல் ஆணையர் க்யானேஷ் குமாரிடம் ராஜினாமா கேட்டார், எஸ்ஐஆர் பயிற்சியை நிறுத்த வலியுறுத்தல்



தமிழகத்தின் திராவிட முன்னேற்றக் கழக (திமுக) தலைவர் மு.க. ஸ்டாலின், தலைமைத் தேர்தல் ஆணையர் க்யானேஷ் குமாரிடம் உடனடியாக ராஜினாமா செய்யக் கோரி கடுமையான கோரிக்கையை முன்வைத்துள்ளார். தேர்தல் ஆணையரின் செயல்பாடுகள் தேர்தல் செயல்முறையின் மீதான பொதுமக்களின் நம்பிக்கையைக் குறைத்துவிட்டதாகவும், நம்பகத்தன்மையை மீட்டெடுக்க அவரது பதவி விலகல் அவசியம் என்றும் ஸ்டாலின் கூறினார். மேலும், அவர் தற்போது நடைபெற்று வரும் எஸ்ஐஆர் பயிற்சியை உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும், இது மிகவும் அவசரமாகவும் வெளிப்படைத்தன்மை இல்லாமலும் இருப்பதாகக் கூறினார். ஜனநாயகக் கட்சித் தலைவர், மத்திய அரசிடம் தலையிட்டு இதுபோன்ற எந்தப் பயிற்சியும் நிறுவப்பட்ட விதிமுறைகளுக்கு இணங்குவதை உறுதி...

## தமிழ்நாடு முதல்வர் விஜய் அக்டோபர்-டிசம்பர் மாதங்களில் வெள்ள அபாய எச்சரிக்கை விடுத்துள்ளார்

வானிலை ஆய்வுத் துறையின் தரவுகளின்படி, அக்டோபர் முதல் டிசம்பர் வரை தமிழ்நாட்டில் வெள்ள அபாயம் அதிகரித்துள்ளதாக முதல்வர் விஜய் theweek.in இடம் தெரிவித்தார். சமீபத்திய கனமழை காரணமாக ஆறுகள் மற்றும் தாழ்வான பகுதிகளில் உள்ள நீர்நிலைகள் நிரம்பிவிட்டதாகவும், இது தென்மேற்கு பருவமழை தொடங்கும் போது திடீர் வெள்ளப்பெருக்குக்கான வாய்ப்பை அதிகரித்துள்ளதாகவும் அவர் கூறினார். மாவட்ட அதிகாரிகளுக்கு அவசரகால குழுக்களை தயார் நிலையில் வைத்திருக்கவும், வடிகால் வாய்க்கால்களை சுத்தம் செய்யவும், நிவாரண முகாம்களை தயார் நிலையில் வைத்திருக்கவும் முதல்வர் அறிவுறுத்தியுள்ளார். மேலும், வெள்ள அபாயம் உள்ள பகுதிகளில் வசிக்கும் மக்கள் உள்ளூர் எச்சரிக்கைகளை கவனிக்கவும், கனமழையி...

## சுற்றுலா கணக்கெடுப்பில் உத்தரப் பிரதேசம் அதிக பயணிகளைக் கொண்டுள்ளது, தமிழ்நாடு மற்றும் ராஜஸ்தானை முந்தியுள்ளது

பிசினஸ்லைன் வெளியிட்ட ஒரு சுற்றுலா கணக்கெடுப்பின்படி, உத்தரப் பிரதேசம் மொத்த பயணிகளின் பயணங்களில் மிகப்பெரிய பங்கைப் பெற்றுள்ளது, இது அனைத்து மாநிலங்களிலும் முன்னணியில் உள்ளது. இந்த கணக்கெடுப்பு உள்நாட்டு பயணப் புள்ளிவிவரங்களை சேகரித்தது மற்றும் விடுமுறை, புனித யாத்திரை மற்றும் வணிக நோக்கங்களுக்காக உத்தரப் பிரதேசத்தை ஒரு முக்கிய இடமாக அடையாளம் காட்டியது. இந்த அறிக்கையானது, ஆக்ராவின் தாஜ் மஹால், வாரணாசியின் घाटங்கள், வனவிலங்கு சரணாலயங்கள் மற்றும் மதப் பயணப் பாதைகள் போன்ற உத்தரப் பிரதேசத்தின் பல்வேறு ஈர்ப்புகளை அதன் வலுவான செயல்திறனுக்கான முக்கிய காரணமாகக் குறிப்பிடுகிறது. இந்த சொத்துக்களை மேம்படுத்துவதற்காக மாநிலம் பல முயற்சிகளை மேற்கொண்டுள்ள...